# நிறுவுனர் நினைவு நாள் - 2017



30 வது ஆண்டில்
வாழ்வகம்

## அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி

# நினைவுப்பேருரை - 11

## 2017

## வடமாகாண வைத்திய சேவையில் யாழ் போதனா வைத்தியசாலையின் பங்களிப்பு

நினைவுப் பேருரையாளர்:

**வைத்தியகலாநிதி த. சத்தியமூர்த்தி,**
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

**வாழ்வகம்**

**விழிப்புல வலுவிழந்தோர் இல்லம் - சுன்னாகம்**

**11.09.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வக அன்னை துதி

பல்லவி

ஒளி காட்டியே எங்கள் வழிகாட்டியே தெளிவோடு
வழிசேர்த்த வழிகாட்டியே

அனுபல்லவி

அன்னை அன்னலட்சுமியைப் போற்றுவோம்
அவர் நினைவிலெமை உரு வாக்குவோம்.

(ஒளிகாட்டியே......)

சரணங்கள்

பார்வையிலா மனிதரென்ன நடைப்பிணங்களா
பாரிலவர்க் குதவிடுவோர் எவரும் இல்லையா
ஆர் வருவார் என்றிருந்த வேளையிலே
ஆதரிக்க அன்னை வந்தார் கடவுள்போலவே

(ஒளி காட்டியே......)

கல்வி தந்தார் கவின் கலைகள் பயிற்றுவித்தார்
கண்போலக் காத்தவையில் முந்தவைத்தார்
பல்விதமாய்த் தொழில் பலவும் கற்றுயர்ந்தே
பண்புநிறை இன்பவாழ்வை எமக்களித்தார்.

(ஒளி காட்டியே......)

வாழ்வகமாம் கனிமரத்தை நாட்டிவைத்தார் - அதில்
வந்தமரும் குஞ்சுகளுக்கு ஊட்டிவிட்டார்
ஆள் உலகை என்றுதெம்பாய் ஆசிகூறி
ஆற்றலராய் உலகில்நட மாடவைத்தார்.

(ஒளி காட்டியே......)

அன்னையாகினார் எங்கள் தந்தையாகினார்
ஆதரித்து அருளுகின்ற தெய்வமாகினார்
பின்னை யாவரும் போற்றும் வண்ணமாய்
எம்மையாக்கினார் அன்ன லட்சுமி அன்னை.

(ஒளி காட்டியே.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வகத் தலைவரின் உள்ளத்திலிருந்து

இனிய உறவுகளே, உங்கள் இதயங்களோடு உறவாடக் கிடைத்த இந்த உன்னத தருணத்துக்காக இறைவனுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

எமது வாழ்வக நிறுவனமானது தனது முப்பதாவது அகவையில் நடை பயின்றுகொண்டிருக்கின்ற மகத்தான தருணமிது. இலங்கை வாழ் தமிழ் பேசும் விழிப்புல வலுவிழந்தோரின் கல்வி வரலாற்றில் காத்திரமான பங்களிப்பினை வழங்கிய எமது ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த நிறுவனமானது இன்று இலங்கை வாழ் தமிழ் பேசும் விழிப்புல வலுவிழந்தோரின் கல்வி வரலாற்றில் காத்திரமான ஒரு பங்களிப்பினை வழங்கி வருகின்றது என்றால் அதில் மிகையேதுமில்லை. கண் பார்வையிழப்பு வாழ்வின் முடிவன்று. சீரிய கல்வி வாய்ப்புக்களும் நேரிய வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றபோது விழிப்புல வலுவிழந்த மாணவர்களும் தம் வாழ்வில் பல நிமிர்வுகளைக் காணமுடியும், நிம்மதியாய் வாழமுடியும் என்பதனை வாழ்வகம் தனது செயற்பாடுகள் மூலம் நிரூபித்து வருகின்றது.

விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளை அன்போடு அரவணைத்து, அமைதியான, ஆனந்தமான ஒரு சூழலில் அவர்கள் கற்பதற்கும் தம்மை வளப்படுத்திக்கொள்வதற்கும் வாழ்வகம் வாய்ப்பளிக்கின்றது. இவர்களின் ஒட்டுமொத்த விருத்திக்கும் தேவையான அத்தனையும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

தற்போது வாழ்வகத்தின் பயனாளிகளாக நாற்பத்தேழு பிள்ளைகள் உள்ளனர். இவர்களைவிட இன்னும் அதிகமானோர் வெளியில் உள்ளனர். இவர்களையும் அரவணைத்து அவர்களது வாழ்வையும் வளம்படுத்தவேண்டிய பொறுப்பும் கடப்பாடும் எமக்குண்டு என்றே கருதுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையார் அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஊன்றிய வாழ்வக வித்தானது இன்று விருட்சமாய் நிமிர்ந்து நிற்கின்றது. விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளுக்கு இனிய நிழல் தந்து போசிக்கின்றது. இந்த நிமிர்வுக்கு எங்கள் அன்னை அவர்களின் அன்பும் ஆசிகளும் ஆண்டவனின் அருளுமே காரணம் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்த ஆசைப்படுகின்றேன். அன்னையவர்கள் என்னிடம் ஒப்படைத்த இந்தப் பணியை அவர் வழியிலேயே நின்று ஆற்றுவதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கிய, வழங்கி வருகின்ற அத்தனை உறவுகளுக்கும் எனது ஆழ்மனதில் ஊற்றெடுக்கும் அன்பையும் நன்றியையும் காணிக்கையாக்குகின்றேன்.

எமது பணிகள் யாவும் மேலும் வலுவுடனும் வனப்புடனும் தொடர இறையருளும் எமது வாழ்வக அன்னையின் ஆசிகளும் உன்னத உறவுகளின் ஆதரவும் தொடர்ந்தும் கிடைக்கும் என உறுதியாக நம்புகின்றேன்.

மனுக்குல சேவை இறை பணிக்கு ஈடானது.

**நன்றி.**

ஆறுமுகம் ரவீந்திரன்,
தலைவர்,

வாழ்வகம்.
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.
11.09.2017.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண வைத்திய சேவையில்
## யாழ் போதனா வைத்தியசாலையின் பங்களிப்பு

இலங்கையில் வாழும் 2 கோடி 6 லட்சத்து 75 ஆயிரம் மக்களுக்கு வைத்திய சேவையை வழங்குவதற்கு பல்வேறு தரமான ஆயிரத்து எண்பத்தைந்து வைத்தியசாலைகள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இயங்கி வருகின்றன.

அவையாவன:-

தேசிய வைத்தியசாலை - 1, போதனா வைத்தியசாலைகள் - 21, மாகாண வைத்தியசாலைகள் 3, மாவட்ட பொது வைத்தியசாலைகள் - 18, தர தள வைத்தியசாலைகள் 78AB, தர வைத்தியசாலைகள் - 490 ABC மற்றும் 475 - ஆரம்ப மருத்துவ நிலையங்களும் அடங்கும்.

வட மகாணத்திலுள்ள 5 மாவட்டங்களில் 99 பல்வேறு தரப்பட்ட வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன. இவ்வனைத்து வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெறுபவர்கள் மேலதிக சிகிச்சை தேவைப்படின் யாழ் போதனா வைத்தியசாலையை நாடுகின்றார்கள்.

யாழ் போதனா வைத்தியசாலையானது யாழ் நகரின் மத்தியில் 13½ ஏக்கர் காணியில் அமைந்திருக்கின்ற 24மணி நேரமும் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கும் ஒரு சேவை நிலையமாகும். இவ் வைத்தியசாலையானது 1236 படுக்கைகளைக் கொண்ட பல்வேறு விடுதிகள் உட்பட பல விசேட அலகுகளையும் கொண்டு இயங்கி வருகின்றது.

### + வைத்தியசாலைக் கட்டிட வசதிகள்

சுமார் 100 வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் இவ் வைத்தியசாலை படிப்படியாக கட்டிட வசதிகளைத் தேவைக்கு ஏற்றவாறு நிர்மாணித்துக்கொண்டு வருகின்றது. 1900 ஆம் ஆண்டளவில் சிறிய மருத்துவ நிலையமாக இயங்கிய இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலை பின்னாளில் படிப்படியாக அதன் தரத்தை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. மேற்படி வைத்தியசாலைக் காணியில் சுமார் 50 இற்கும் மேற்ப்பட்ட தனியான கட்டிடப் பகுதிகளைக் கொண்டிருக்கிறது. இவற்றில் பெரும்பாலானவை ஒரு தளத்தில் மாத்திரம் இயங்கி வருகின்றன.

வைத்தியசாலையின் காணிப்பகுதியில் எதிர்வரும் 50 ஆண்டு காலப்பகுதிக்குத் தேவையான கட்டிடங்களை அமைத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மத்திய செயற்ப்பாட்டிற்கான (ஆய்வு கூடம், பரிசோதனை பிரிவுகள், சத்திர சிகிச்சைப் பிரிவு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவு) கட்டிடம் 2012 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு பல புதிய கட்டிடத் தொகுதிகளை விரைவாக அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இருதய சிகிச்சைப் பிரிவுத் தொகுதி, மகப்பேற்று விடுதிப் பகுதி, சிறுநீரக சிகிச்சைத் தொகுதி முதலான கட்டிடத் தொகுதிக்கான வேலைகளை எதிர் வரும் ஆண்டுகளில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாடிக் கட்டிடங்கள் கட்டுவதன் மூலம் தற்போது நிலவுகின்ற நெருக்கடிகளைத் தவிர்ப்பதுடன் வைத்தியசாலையை நோக்கி வருகின்ற நோயாளிகளுக்கு போதியளவு வசதிளுடன் கூடிய சிறப்பான சேவையை வழங்க முடியும்.

+ வைத்தியசாலையின் ஆளணி விபரம்

தற்போது யாழ் போதனா வைத்தியசாலையின் பல்வேறு சேவைகளைப் புரியும் 1800 உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றனர். இதில் 75 வைத்திய நிபுணர்களும் 230 வைத்தியர்களும் 430 தாதியர்களும் அடங்குவார்கள். சுமார் 60 வைத்தியர்களுக்கான வெற்றிடமும் 200 இற்கும் மேற்பட்ட தாதியர்களுக்கான வெற்றிடமும் விரைவாக நிரப்பப்படுவதன் மூலம் குறிப்பிட்ட அளவு சேவையின் தரத்தில் முன்னேற்றம் அடைய முடியும்.

கடந்த 30 வருட காலமாக இப்பகுதியில் நிலவிய யுத்த சூழ் நிலை காரணமாக இப்பகுதியில் இருந்து பெருமளவு பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களும் உத்தியோகத்தர்களும் படிப்படியாக வெளியேறி இருந்தார்கள். இந்த வீழ்ச்சியினால் ஆளணிப் பற்றாக்குறை இந்த வைத்தியசாலைக்கும் இம் மாகாணத்திலுள்ள ஏனைய வைத்தியசாலைகளுக்கும் ஒரு பொதுவான பிரச்சனையாக இருந்தது. இவ் வைத்தியசாலைக்கு இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் இருந்து உத்தியோகத்தர்கள் கடமைக்கு வந்து செல்கின்றார்கள். அதில் அனேகமானவர்கள் ஒரு சில வருடங்களில் இடமாற்றமாகி செல்கின்றனர். இதன் காரணமாக வைத்திய சேவையில் திடீர் குறைபாடுகளும் சேவையினைச் சிறப்பாக வழங்க முடியாத நிலையும் ஏற்படுகின்றது. இந்நிலையில் தொடர்ச்சியாக சேவையினை வழங்குவதில் சிக்கல் நிலையும் ஏற்ப்படுகின்றது. தற்போது நாட்டில் ஏற்ப்பட்டுள்ள சுமுகமான சூழ்நிலை காரணமாக பலர் இப்பகுதியில் தொழிலைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகரித்துக் காணப்படுகின்றது. இங்கு சேவையினை தொடரக்கூடிய வாய்ப்பும் காணப்படுகின்றது.

## + புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சேவைகள்.

30 வருடங்களுக்கு முன்னராக யாழ் போதனா வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர் கடமையாற்றிக் கொண்டிருந்தார். ஆனால் கடந்த 30 வருடங்களாக நிலவி வந்த வெற்றிடம் தற்போது நிவர்த்தி செய்யப்பட்டு புதிதாக இருதய சத்திர சிகிச்சை நிபுணர் கடமைக்கு வந்துள்ளார். சத்திர சிகிச்சை ஆரம்பிக்கப்படுவதற்கான பல கோடி ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மத்திய அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஒரு சில மாதங்களில் படிப்படியாக சத்திர சிகிச்சை ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

மேற்படி வைத்தியசாலையில் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைப் பிரிவை அமைப்பதற்க்கான கட்டிடத் தொகுதியையும் ஏனைய வளங்களையும் வழங்குவதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இதற்கான வசதிகள் செய்யப்பட்டு ஏனைய உபகரணங்களும் ஆளணி வசதிகளும் வழங்கப்படும் போது சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சையை இவ் வைத்தியசாலையில் செய்ய முடியும். சிறுநீரக நோயினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போது படிப்படியாக அதிகரித்து வருகின்றது. பலருக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை தேவைப்படுகின்ற போதிலும் அவற்றைச் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

வைத்தியசாலையின் மேற்குப் பகுதியில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான கட்டிடம் அமைக்கப்பட்டு வருகின்றது. எதிர் வரும் ஆண்டின் ஆரம்பத்தில் இப்பகுதியில் சேவையை ஆரம்பிக்க கூடியதாக இருக்கும். தற்போது வைத்தியசாலையில் கட்டிட வசதிப் பற்றாக்குறை காணப்படுகின்றமையினால் மிகுந்த சிரமத்தின் மத்தியில் பொது மக்களுக்கான சேவை வழங்கப்பட்டு வருகின்றது.

**+ இணுவிலில் அமைக்கப்படவுள்ள சிறுவர் வைத்தியசாலை**

இணுவில் மக்லியோட் வைத்தியசாலையின் காணிப் பகுதியில் 4½ ஏக்கர் காணியினை சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்காக அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. வைத்தியசாலைக் கட்டிட வேலைகள் மூன்று படி நிலைகளில் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றை அமைப்பதற்கு ரூபா 6 பில்லியன் நிதி தேவைப்படுகின்றது. இவ் வைத்தியசாலையை அமைப்பதன் மூலம் யாழ்ப்பாணத்தில் சிறந்த சிறுவர் வைத்திய சேவையினை வழங்க முடியும். யாழ் போதனா வைத்தியசாலையின் ஒரு பிரிவாக இயங்கப் போகும் இவ் வைத்தியசாலை குழந்தைகளுக்கு சிகிச்சை வழங்கும் பல்வேறு அலகுகளைக் கொண்டு இயங்கும். இச் சிறுவர் வைத்தியசாலையின் உருவாக்கம் இப் பகுதியின் சுற்றயலில் பொது மக்கள் அதிகளவில் குடியிருப்புக்களை அமைத்துக்கொள்ள வழி வகுப்பதுடன் வைத்தியசாலையை அண்டிய சிறிய நகரங்கள் பெரிய நகரங்களாக வளர்ச்சி அடையவும் வாய்ப்பாக அமையும்.

+ பயிற்சிகள்

இவ் வைத்தியசாலைப் பகுதியில் தாதியப் பயிற்சிக் கல்லூரியும் அமைந்திருக்கின்றது. சுமார் 300ற்கும் மேற்பட்ட தாதிய மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கக் கூடியதான வசதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. கடந்த பல வருடங்களாக இப் பகுதியில் குறைந்தளவு மாணவர்களே தாதியர் பயிற்சி பெற்றுக் கொண்டனர் ஆனாலும் தற்போது அதிகரித்துச் செல்லும் நிலை காணப்படுகின்றது.

மருத்துவ பீடக் கல்வி கற்கும் 3ம், 4ம், 5ம் வருட மாணவர்கள் 300ற்கும் மேற்ப்பட்டவர்கள் வைத்தியசாலையின் பல்வேறு பகுதிகளில் நேடியாகச் சென்று பயிற்சிகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

மருத்துவ மாதுக்கள், ஆய்வு கூட உத்தியோகத்தர்கள் மற்றும் பல்வேறு பட்ட பிரிவினர்கள் பயிற்சி பெறுவதற்கான நிலையமாக இவ் வைத்தியசாலை காணப்படுகின்றது. பட்டப் பின் படிப்பில் பல்வேறு துறைகளுக்கான விசேட பயிற்சி நிலையமாகவும் இவ் வைத்தியசாலை காணப்படுகின்றது.

+ நோயாளர் சேவைகள்

வெளி நோயாளர் பிரிவு சேவை:-

தினசரி 800ற்கும் மேற்ப்பட்டவர்கள் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 8.00 மணி வரை சிகிச்சை பெற்றுக் கொள்கின்றார்கள். பல்வேறு தரப்பட்ட பிரச்சினைக்காக வைத்தியசாலைக்கு அண்மையிலும் தொலை தூரங்களிலும் இருந்து சிகிச்சை பெற வருகின்றனர். அரைவாசிக்கும் மேற்ப்பட்டவர்கள் அவர்கள் அருகில் இருக்கும் சிறிய வைத்திய சாலைக்கு செல்லாது இங்கு நேரடியாகவே சிகிச்சைக்கு வருகின்றார்கள் இந்த நிலை மாற வேண்டும் குறிப்பாக, சிறிய நோய்கள் ஏற்ப்படுகின்ற போது அருகில் இருக்கும் சிறிய வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறுவதுடன் மேலதிக சிகிச்சை தேவைப்படின் வைத்தியரின் ஆலோசனையின் பிரகாரம் இவ் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வருவது சிறந்ததாக அமையும்.

+ வைத்தியசாலையில் தங்கி நின்று சிகிச்சை பெறல்.

தினசரி 1000த்திற்கும் மேற்ப்பட்டவர்கள் இவ் வைத்தியசாலையில் தங்கி நின்று சிகிச்சை பெறுகின்றார்கள் பல்வேறு நோய்களுக்காக ஒவ்வொரு நாளும் 300ற்க்கும் மேற்பட்டவர்கள் புதிதாக அனுமதிக்கப்படுகின்றனர். அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவானவர்கள் ஒரு சில நாள்களில் சிகிச்சை முடிந்து வெயியேறுகின்றனர். சில சமயங்களில் சிலருக்கு கட்டில் வசதிகளை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது. யாழ்பாணத்தில் இருக்கின்ற ஏனைய வைத்தியசாலைகளில் தங்கிச் சிகிச்சை பெறும் வசதிகள் அதிகரிக்கின்ற போது இந்த அசௌகரியமான நிலைக்கு தீர்வு ஏற்படும். அதே வேளை புதிய விடுதிகளை அமைப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகின்றது.

**+ போதனா வைத்தியசாலையில் மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட ஏற்பாடுகள்.**

குறிப்பாக முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்காக விசேட வைத்திய முகாம்கள் விசேட வைத்திய நிபுணர்களின் உதவியுடன் நடைபெற்றுள்ளன. இதுவரை 4 விசேட மருத்துவ முகாம்கள் போதனா வைத்தியசாலையில் நடாத்தப்பட்டுள்ளன. அனைத்துலக மருத்துவச் சங்கத்தின் உதவியுடன் இவ் வைத்திய முகாம்களில் முள்ளந்தண்டுவடம் பாதிப்புற்ற 40ற்கும் மேற்பட்டவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

போரினாலும் பல்வேறு விபத்துக்களினாலும் முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றவர்கள் இடுப்பு அல்லது கழுத்துப் பகுதிக்குக் கீழ் செயலிழந்து படுக்கையிலும் சக்கர நாற்காலியிலும் வாழ்க்கையை நடாத்துகின்றனர். படுக்கைப்புண் பலருக்கு நீண்டகாலப் பிரச்சினையை ஏற்படுத்துகின்றது. தேவையானவர்கள் பிளாஸ்ரீக் சத்திர சிகிச்சைக் கிளினிக்குகளுக்கு அனுப்பப்பட்டு ஒட்டுறுப்பு சத்திர சிகிச்சைகள் ( Plastic Surgery ) மேற்கொள்ளப்பட்டது. முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றவர்களுக்கு கிளினிக்குகளில் முன்னுரிமை அடிப்படையில் சிகிச்சை வழங்கப்படுகின்றது.

இதனை விட கால்களில் சத்திரசிகிச்சை மேற்கொண்டவர்கள் வாகனங்களில் வந்து சக்கரநாற்காலி இல்லாமல் கிளினிக்களுக்கு செல்வதில் சவால்ளை எதிர்நோக்கினர். புதிதாக விசேடமாக வடிவமைக்கப்பட்ட 20 சக்கரநாற்காலிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 சக்கர நாற்காலிகள் தருவிக்கப்பட உள்ளது. நடந்து செல்வதில் சிரமம் உள்ளவர்கள் இவர்களிடம் சென்று சக்கரநாற்காலிகளைப் பெற்று உரிய இடங்களுக்குச் சென்று சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மாற்றுத்திறனாளிகளுக்கு கிளினிக் மற்றும் மருத்துவப் பரிசோதனைகளில் முன்னுரிமை வழங்குமாறு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு மேலும் வசதிகள் செய்து தரப்படும்.

## + வைத்தியசாலை எதிர்கொள்ளும் சவால்கள்

தினசரி வைத்திசாலைக்கு 800ற்கு மேற்பட்டவர்கள் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுக்கும் 2400ற்கு மேற்பட்டவர்கள் பல்வேறு கிளினிக் பிரிவுகளுக்கும் வருகை தருகின்றனர். இது தவிர உள்ளக விடுதிகளில் 1000ற்கு மேற்ப்பட்டவர்கள் தங்கி இருந்து சிகிச்சை பெறுகின்றனர். மேலும் நோயாளர்களின் உறவினர்கள் பாதுகாவலர்கள் என 2500ற்கு மேற்பட்டவர்கள் வைத்தியசாலையில் பல மணி நேரம் தங்கியிருக்கின்றார்கள். ஆகவே இங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அடங்கலாக 8000ற்கும் மேற்பட்டவர்கள் இந்தப் பகுதியில் தினசரி வைத்தியசாலைக் கடமைகளுக்காகவும் சேவைகளுக்காகவும் கூடியிருக்கும் மிகவும் சிக்கல் தன்மை வாய்ந்ததும் சுறுசுறுப்பாக இயங்குகின்ற ஒரு நிலையமாகும்.

பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்ய வரும் நோயாளர்களுக்கு தேவையான அனைத்தையும் நிறைவேற்றுவது மிகவும் சவாலான ஒரு விடயம் ஆகும். இவற்றை நிறைவேற்றுதற்காக பல்வேறு கட்டமைப்புகளும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் சில சமயங்களில் தடங்கல்கள் ஏற்படுகின்றது. சில சமயம் இவ்வாறான தடங்கல்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் ஆராயப்பட்டு பின்னாளில் அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களை பார்வையிட தினசரி உறவினர்களும் நண்பர்களும் பல நூற்றுக்கணக்கானவர்கள் வந்து செல்கின்றனர். இதனால் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதுடன் சில சமயங்களில் உரிய சிகிச்சைக்கு தடங்கல்களையும் ஏற்படுத்துகின்றனர். தங்கியிருப்பவர்களை பார்வையிட வரும் உறவினர்கள் தேவையற்ற பொருட்களை கொண்டு வந்து அவற்றை வைத்தியசாலைப் பகுதியில் விட்டுச் செல்வதனால் கழிவு அகற்றுவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக பொலித்தீன் கழிவுகள் வைத்தியசாலை வளாகத்தில் தடை செய்யபட்டு இருக்கின்ற போதும் அவற்றை எடுத்து வருகின்றனர்.

யாழ் போதனா வைத்தியசாலையில் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கு பொதுமக்களதும் வைத்தியசாலை அயலில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுபவர்களதும் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.

வைத்தியகலாநிதி த. சத்தியமூர்த்தி,
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்வகக் கீதம்**

ஞான ஒளி தரும் வாழ்வகமே வாழி
ஞாலந் தனிலே விழிப்புல வலுவிழந்தோர்க்கு
ஞான ஒளி தரும் வாழ்வகமே.

ஊனக்கண் இழந்தாலும் ஞானக்கண்ணைத் திறந்தே
மௌன மொழி கல்விகலை மேதினியில் ஊட்டி வைக்கும்
ஞான ஒளிதரும் வாழ்வகமே.

அன்பொடு ஆற்றலும் அறிவொடு ஒழுக்கமும்
பண்பொடு பண்பாடும் பயனுறத் தரும் இல்லம்
இன்பமாய் எல்லோரும் இனித்திட வாழ்ந்திட
துன்பமெல்லாம் துடைக்கும் தொண்டுகள் செய்யும் இல்லம்

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வகச் சமூகம்

021 224 0146,

076 8286331.

சாயி பிறிண்டேர்ஸ் - 077 2209474.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org